**O.S.No. 308/2019**

**Dated 15.04.2025**

**வா.சா.1 சங்கரகோமதி**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிராதில் கூறியுள்ள சின்னசாமி நாடாரின் மனைவி தான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி சின்னசாமி நாடாருக்கும் 3ம் பிரதிவாதிக்கும் ஒரே ஒரு ஆண் வாரிசு. அவர் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். வேறு அவர்களுக்கு பெண் வாரிசு கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்து சின்னசாமி நாடாருக்கு அவரது சகோதரர்களுக்கு இடையில் நடைபெற்ற பாகப்பிரிவினையில் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து சின்னசாமி நாடாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து அவரது பாகத்திற்கு கிடைக்கும்போதே 1ம் பிரதிவாதி அவரது மகனாக இருந்து வருகீறார் என்றால் சரிதான். தாவா சொத்து சின்னசாமி நாடாருக்கு கிடைத்த பிறகு 1ம் பிரதிவாதிக்கும் சேர்த்து இந்து குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பொது சொத்தாக அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனவே தாவா சொத்தில் சின்னசாமிநாடாருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாதி பாதி பங்கு கிடைக்கதக்கது என்றால் சரிதான். நானும் வாதிகளும், 2ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் மக்கள் என்றால் சரிதான். பிராது சொத்தில் சின்னசாமி நாடாருக்கு 23.11.2011 தேதிய செட்டில்மெண்ட் காலத்தில் முழு உரிமையும் கிடையாது என்றால் சரிதான். முழு உரிமை இல்லாத நிலையில் சின்னசாமி நாடார் தாவா சொத்தை பொறுத்து எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தினை 2ம் பிரதிவாதிக்கு மனப்பூர்வமாக எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தினை அவரது செல்வாக்கினை பயன்படுத்தி பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படிஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி தாவா சொத்தினை அடையவும் இல்லை அனுபவம் செய்யவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு உள்ள பாதி பங்கிற்கு தான் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். சின்னசாமி நாடார் இறக்கும்போது அவரது மனைவியான 3ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியும் தான் வாரிசு நிலைமையில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

மேற்படி 3ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு இடையில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதியன் பங்கு அவரது ஒரே வாரிசான 1ம் பிரதிவாதிக்கு கிடைக்ககூடியது என்றால் சரிதான். பிராது சொத்தை பொறுத்து எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ¾ பாகம் கிடைக்ககூடியது என்று கூறுவது தவறானது என்றால் சரியல்ல. அதனால் பிராதில் கூறியவாறு பங்கு பாகம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் அடிப்படையில் நடைபெற்ற கிரையங்கள் முழுசொத்திற்கு உரிமையில்லாத நபர்களினால் உண்டாக்கப்பட்ட காரணத்தினால் கிரையங்கள் செல்லாது என்றால் சரிதான்.

**4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது–**